## எந்தக் கருத்துத் திணிப்புகளும் எடுபடாது!

# 2026-ல் மீண்டும் திராவிட மாடல் 2.0 ஆட்சிதான்!



கடந்த ஒரு வாரமா எந்த சேனலை திருப்பினாலும் சரி, யூ டியூப் அரசியல் பக்கங்கள் சென்றாலும் சரி... அவங்க கருத்துக் கணிப்பு வந்துடிச்சி, இவிங்க கணிப்பு வந்துடிச்சி... அவங்க அப்பவே சூப்பர், இவிங்க அதுக்கு மேல டூப்பர். இவங்க எல்லாம் கருத்துக் கணிப்பு சொன்னா சொன்னபடி நடக்கும்ன்னு பில்ட்டப் கொடுத்துட்டு...

அதுக்கு ஒரு அரசியல் விமர்சகர் அல்லது மூத்த பத்திரிக்கையாளர் அல்லது மூத்த வழக்கறிஞர் அல்லது லெட்டர் பேட் கட்சியின் செய்தி தொடர்பாளர் என்ற பெயர் பலகையோடு உட்கார வைத்து அவர்களிடம் கருத்துக் கேட்டு...

அவர்களும், விஜய்க்கு 15 பர்செண்ட் கொடுத்ததை நான் ஏத்துக்க மாட்டேன். அவருக்கு 12 தான் கொடுத்திருக்கனும் என்று தனது நேர்மையான நடுநிலையை(!?) பறைசாற்றிக் கொண்டே.

இந்த மண்டலத்தில் இந்த சாதிக்காரர்கள் தான் அதிகம். அங்கே இந்த சமூகத்திற்கு அந்த கட்சி மேல செம்ம காண்டு இருக்கு. அரசு ஊழியர்களின் ஒரு கோடி வாக்குகள்(!?) யாருக்கு போகப் போகுது தெரியுமா..?! முதல் தலைமுறை இளம் வாக்காளர்களின் மூன்று கோடி வாக்குகளை(!) யார் அள்ளப் போகிறார்கள் தெரியுமா..?!... கஞ்சா விற்பனை கரைபுரண்டு ஓடுது. லாக்கப்புக்கு போறவங்கள எல்லாம் போலீஸ் அடிச்சே கொன்னுடுறாய்ங்க. ரோட்டுல பெண்கள் போகவே முடியாம, எல்லோரும் இப்ப வேட்டி சட்டையோட ஆண் போன்று மாறு வேடத்தில் தான் போயி வேலை பார்குறாங்க தெரியுமா..?!

இப்படியெல்லாம் அறச் சீற்றத்தோடு கேள்விகளை எழுப்பியவாறே இதையும் தாண்டி திமுகவுக்கு ஒரு எட்ஜ் கொடுத்து இந்த சேனல் கூட்டணி ஆட்சி தான் வரும்ன்னு சொல்லுதுன்னா என்ன அர்த்தம்..?! என்று கருத்துக் கணிப்பு வெளியிட்ட அந்த சேனல் நடுநிலை தவறி விட்டதாக சேனல் மீதும் தங்கள் நெற்றிக்கண்ணை திருப்பி.

**சௌமியன் வைத்தியநாதன்**
கழக இலக்கிய அணி
துணைச் செயலாளர்



அண்ணனுக்கு ஒரு ஜோடா ப்ளீஸ் லெவலுக்கு முடிப்பார்கள்.!!

இதையெல்லாம் பார்க்கும் அந்த கருத்துக்கணிப்பு எடுத்த நிறுவன மும், வெளியிட்ட ஊடகமும் வாங்குன காசுக்கு மேல கூவுறாண்டா ங்கொய்யால என்று சொல்லாம, வாயில துண்டை வைத்து அமுக்கி... சிரிக்கிறாய்ங் களா?! அழுவுறாய்ங்களாங்கறதே கண்டுபிடிக்க முடியாதபடிக்கு பர்ஃபார்மென்ஸ் பண்ணி...

ஹுஃப்.

ஆனால் ஆக்சுவலா களத்துல என்ன நடக்குதுன்னா?!..

திமுகழக தலைவரும் தமிழ்நாட்டின் முதல மைச்சருமான தலைவர் தளபதியார் அவர்களை மக்கள் மீது அட்டாக் என்று சொல்ல முடியாது... ஆனால் மக்களை நோக்கி ஐந்து முனை அப்ரோச் எனப்படும்... மக்களோடு மக்களாக ஊடுருவி உரையாடி, உறவாடி,, ஒன்றிணைந்து கொண்டிருக்கின்றார் என்றால், அது தான் எதார்த்தம்..!

ஒரு பக்கம் #ஓரணியில்தமிழ்நாடு என்ற முழக்கத்துடன் 68ஆயிரத்தி ஐநூறு பாக டிஜிட்டல் முகவர்களையும்... அவர்களோடு இணைந்து இன்னுமொரு 68ஆயிரத்தி ஐநூறு பாக முகவர்களையும், இன்னுமொரு 68ஆயிரத்தி ஐநூறு பாக இளைஞரணி பிரதிநிதிகளையும், இன்னுமொரு 68ஆயிரத்தி ஐநூறு பாக ஐடி விங் பிரதிநிதிகளையும், இன்னுமொரு 68ஆயிரத்தி ஐநூறு பாக மகளிரணி பிரதிநிகளையும் ஆக மொத்தம் மூன்று லட்சத்தி நாற்பத்தி இரண்டாயிரத்தி ஐநூறு தேர்தல் போர் வீரர்களை தமிழ்நாட்டில் உள்ள 234 சட்டமன்ற தொகுதிகளின் அனைத்து பாகங்களிலும் அதாவது தமிழ்நாட்டின் அனைத்து பூத்துகளிலும் வாக்களிக்கக் கூடிய சராசரியாக 1000 வாக்காளர்களின் 350 குடும்பங்களையும் நேரடியாக சந்தித்து

அதாவது தமிழ்நாட்டில் உள்ள 2 லட்சத்தி 10ஆயிரம் வீடுகளுக்கும் சென்று அவர்களிடம் 10 15 நிமிடங்கள் பேசி ஆட்சியின் நலத்திட்டங்களை எல்லாம் விளக்கிக் கூறி, அவர்கள் கழக உறுப்பினர்களாக விரும்புகின்றார்களா என்று கேட்டறிந்து அவர்களுக்கு விருப்பம் இருப்பின் அவர்களை கழக உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொண்டிருக்கின்றனர். இது ஒரு 45 Days Project.

இரண்டாவது முனையில் உங்களுடன் ஸ்டாலின் என்ற முழக்கத்தோடு தமிழ்நாடு முழுவதும் தமிழ்நாட்டின் 14 அரசுத்துறை அதிகாரிகளும், ஒரு நாளைக்கு 100 இடங்கள் என்கிற வகையில்... நூறு நாட்களில் மொத்தம் 10000 அதாவது பத்தாயிரம் இடங்களில் முகாம்கள் நடத்தி... அந்தந்த பகுதியில் உள்ள மக்களுக்கு முன்கூட்டிய நோட்டீஸ் மற்றும் விளம்பரம் மூலமும், கழக நிர்வாகிகள் மூலமும் நிகழ்ச்சியை தெரியப்படுத்தி

அந்த முகாம்கள் வாயிலாக அரசால் தீர்க்கப்படக் கூடிய, மக்களுக்குத் தேவையான திட்டங்கள், சட்டங்கள், உதவிகள், சேவைகள் மற்றும் அந்தந்தப் பகுதிகளுக்கான பொதுப் பிரச்சினைகள் ஆகியவற்றுக்கு மக்களால் கொடுக்கப்படும் மனுக்கள் அனைத்திற்கும்

வாய்ப்புள்ளவற்றுக்கு அந்த இடத்திலேயே தீர்வு காண வைப்பது, இல்லாவிட்டல் 45 நாட்களுக்குள்ளாக தீர்வோ அல்லது விளக்கமோ அளிப்பது என்கிற வகையில் கடந்த 15 ஆம் தேதி முதல் துவங்கி அடுத்த 100 நாட்களுக்கு இந்த மாபெரும் மக்கள் சேவைகளை அவர்கள் இடத்திற்கே வந்து செய்து தரும் மக்களுக்கான அரசு இது என்பதை சாதித்துக் காட்டும் முன்னெடுப்பு இன்னொரு பக்கம்!

மூன்றாவது முனையில் கழக தலைவருமு, தமிழ்நாட்டின் முதலமைச்சருமான தளபதியார் அவர்கள், வாரத்திற்கு ஒரு மாவட்டம் என்று ஒவ்வொரு வாரம் தமிழ்நாட்டில் உள்ள 38 ரெவின்யூ மாவட்டங்களுக்கும் நேரடியாகச் சென்று இரண்டு நாட்கள் தங்கி மக்களை, தன்னார்வ குழுக்களை, விவசாயிகள் உள்ளிட்ட பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகளை நேரடியாக சந்தித்து உரையாடி, கோரிக்கைகளைக் கேட்டு மனுக்களைப் பெற்று அவற்றுக்கு உடனுக்குடன் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு நிவாரணம் கிடைக்க ஆணை பிறப்பித்து

லட்சக்கணக்கான பொதுமக்களை ரோட் ஷோக்கள் மூலம் சந்தித்து உரையாடி, செல்ஃபி எடுத்துக் கொண்டு, கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டு கழக நிர்வாகி களையும் சந்தித்து கலந்துரையாடி அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்து

இது மூன்றாம் முனை அப்ரோச்!

அடுத்ததாக நம்ம முத்தின பத்திரிக்கையாளர்கள் சிலர் சங்கிகளாக உருமாறிப் போய் சில வாந்திகளை மீடியாவில் எடுத்து வைப்பார்கள். திமுகவுக்கு எதிராகப் பேச எதுவுமே இல்லை என்கிற நிலையில் அங்கே உட்கட்சிப் பூசல் உச்சக்கட்டத்தை தொட்டு விட்டது என்று அதை ஒரு பூதாகரமான பிரச்சினை போன்று காது, மூக்கு, கண் எல்லாம் வைத்துப் பேசி தி.மு.க.வுக்கு எதிரான ஒரு பர்ஸெப்ஷனை மக்களிடம் நிறுவ முயற்சிப்பார்கள்!

இதற்குத் தான் உடன்பிறப்பேவா என்ற முழக்கத்தோடு வாரத்தில் நான்கு நாட்கள் சென்னை அண்ணா அறிவாலயத்தில் தலைவர் தளபதியார் அவர்கள், ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியையும் சார்ந்த ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளையும் அழைத்து தனித்தனியே சந்தித்து ஒரு மணி நேரம் விவாதித்து தீர்வு காண்கிறார். ஒரு நாளைக்கு மூன்று தொகுதிகள் என்று வாரத்திற்கு சராசரியாக 12 தொகுதிகளைச் சார்ந்த கள நிர்வாகிகளை சந்தித்து அவர்களை மகிழ்வோடு தொகுதிக்கு அனுப்பி வைக்கின்றார். இது நான்காவது திசையிலிருந்து மக்களைச் சந்திக்கும் தொண்டர்களை உற்சாகப்படுத்தும் அப்ரோச்!!

இவற்றில் எல்லாம் ஏதாவது சிறு சிறு விடுதல்கள் இருந்தால் அவற்றையும் சரி செய்வதற்கு ஐந்தாவது முனை தாக்குதலாக

கழக இளைஞரணிச் செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான சின்னவர் அவர்கள் ஒவ்வொரு ரெவின்யூ மாவட்டத்திற்கும் இரண்டு நாட்கள் விசிட் அடித்து தலைவர் கட்டளை இட்டுச் சென்ற திட்டங்கள் எல்லாம் சரியாக நடக்கின்றதா என்று மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அனைத்து துறைகளின் அந்தந்த மாவட்ட அதிகாரிகளையும் வைத்து ரிவ்யூ மீட்டிங் எனப்படும் புள்ளிவிவரங்களுடன் கூடிய ஆய்வுகளை நடத்தி பணிகளை முடுக்கி விடுவதோடு

கழக நிர்வாகிகளையும், தொண்டர்களையும் சந்தித்து பொது மக்களோடும் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மீண்டும் மக்கள் நலத்திட்டங்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் கொடுத்து

ஆக... ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சரின் தொடர் வழிகாட்டுதலகளோடும், கள ஆய்வுகளோடும் திமுக தொண்டர்கள் மூலமாக அன்பான அரவணைப்பிலும் பாதுகாப்பிலும் நிம்மதியாக வாழ்ந்து கொண்டும் ஒவ்வொரு குடும்பமும் தனிநபர் வருமனங்களில் மிகப் பெரும் வளர்ச்சியை அடைந்து கொண்டும் இருக்கின்றார்கள் என்பது தான் இன்றைக்கு தமிழ்நாட்டின் கள நிலவரம் எனப்படும் கம்ப்ளீட் ஸ்கேன் ரிப்போர்ட்!

முன்பு போல் எல்லாம் இல்லாமல், மக்கள் இவற்றை எல்லாம் துள்ளியமாக கவனித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு தலைவர் தளபதியார் மீதும், திமுக மீதும் அளப்பறிய நம்பிக்கை இருக்கின்றது!

இங்கே இனி எத்தனை விதமான கருத்துக் கணிப்புக்களும், கருத்துத் திணிப்புக்களும் வந்தாலும் ஆடல் பாடல் நிகழ்ச்சிகளின் கதாநாயகர்கள் வந்தாலும், காதில் மைக் மாட்டிப் பேசும் லேகியம் விற்கும் ஆசாமிகள் கத்திக் கதறினாலும்

2026 இல் மீண்டும் தலைவர் தளபதியார் தலைமையிலான திராவிடமாடல் 2.0 ஆட்சிதான் அமையும்!

---

## இராமநாதபுரம் – கடலாடி – கூவர் கூட்டம் – வெற்றிமாலை கண்மாயில் டிராக்டர் விபத்தில்

# உயிரிழந்த மூன்று பெண்களின் குடும்பத்தினருக்கு - தலா ரூ.3 லட்சம் நிவாரண நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூலை. 28-

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், கூவர் கூட்டம் கிராமத்தி லுள்ள வெற்றிமாலை கண்மாயில் டிராக்டர் கவிழ்ந்த விபத்தில் உயிரிழந்த மூன்று பெண்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கி -தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், ஆப்பனூர் குரூப், கூவர் கூட்டம் கிராமத்தைச் சேர்ந்த 15 நபர்கள் 25.07.2025 அன்று பிற்பகல் ரேஷன் கடையில் பொருட்கள் வாங்கிக் கொண்டு TN73 Y 6910 என்ற பதிவெண் கொண்ட டிராக்டரில், வெற்றிமாலை கண்மாய் கரையருகில் சென்றுகொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக டிராக்டர் கண்மாய் கரையில் உள்ள சாலையில் இருந்து கண்மாய்க்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த திருமதி. பொன்னம்மாள் (வயது 68) க/பெ.பழனி, திருமதி.ராக்கி (வயது 62) க/பெ.நடராஜன் மற்றும் திருமதி.முனியம்மாள் (வயது 55) க/பெ.கருப்பசாமி ஆகிய மூன்று பெண்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இவ்விபத்தில் காயமடைந்து இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் 8 நபர்களுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தி னருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

# இரயில்வே விபத்துகளைத் தடுப்பதற்கு அரசு எடுத்துள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன?

## மாநிலங்களவையில் மரு. கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி!



புதுடெல்லி, ஜூலை 28-

கடந்த ஐந்து ஆண்டுகளில் இரயில் விபத்துகள் அதிகரித்துள்ளது உண்மையா? அப்படி இருப்பின் ஐந்தாண்டுகளில் நடைபெற்ற விபத்துகள் பற்றிய விவரங்களை அளிக்கவும்.

மேலும், இவ்விபத்துகள் நடைபெற்றதற்கான முதன்மையான காரணங்கள் என்ன?

இவ்விபத்துகளில் இறந்தவர்கள் மற்றும் காயமடைந்தோரது குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதா?

இதுவரை நடந்த விபத்துகளால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் பற்றிய ஆய்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா?

சமர்ப்பிக்கப்பட்டிருக்கையில், எதிர்வரும் காலங்களில் இதுபோன்ற இரயில் விபத்துகள் ஏற்படாமல் தடுக்க மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது பரிந்துரைக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன? என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி., மரு. கனிமொழி என்.வி. என். சோமு அவர்கள் கேள்வி எழுப்பி இருந்தார்.

**இக்கேள்விகளுக்கு ஒன்றிய இரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்கள் அளித்துள்ள பதில் வருமாறு:**

பயணிகளின் பாதுகாப்பை பிரதான இலக்காகக் கொண்டு இந்திய இரயில்வே செயல்பட்டு வருகிறது. இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளால் 2004 14 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலங்களில் சராசரியாக ஒவ்வொரு ஆண்டும் 171 விபத்துகள் ஏற்பட்ட நிலையிலிருந்து 2024-25ம் ஆண்டில் 31 என்ற அளவிற்கு குறைக்கப்பட்டுள்ளது.

இரயில்வே தண்டவாளம் மற்றும் இரயில் பெட்டிகளில் குறைபாடு, உபகரணங்கள் செயலிழப்பு மற்றும் மனிதத் தவறுகளால் பிரதான விபத்துகள் ஏற்பட்டிருக்கின்றன.

2020-21ஆம் ஆண்டு முதல் 2024-25ம் ஆண்டு வரையிலான ஐந்து ஆண்டுகளில் இதுவரை ரூ. 39.83 கோடி இரயில் விபத்துகளால் பாதிக்கப்பட்டோரது குடும்பத்தினருக்கு கருணைத் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் இழப்பீட்டுத் தொகையாக கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ. 30.40 கோடி வழங்கப்பட்டுள்ளது.

இரயில்வே துறை சார்ந்த பாதுகாப்பு கட்டமைப்புகளுக்கு 2024-25ம் ஆண்டிற்கு திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி ரூ. 1 இலட்சத்து 14 ஆயிரத்து 22 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 2025-26ம் நிதியாண்டில் ரூ. 1 இலட்சத்து 16 ஆயிரத்து 470 கோடி செலவிடப்படலாம் என கணிக்கப்பட்டுளள்து.

30.06.2025 வரை 6,635 இரயில்வே நிலையங்களில் இன்டர்லாக்கிங் பொறிமுறை பாதுகாப்பு வசதிகள் மற்றும் அதற்கான சிக்னல்கள் அமைக்கப்பட்டு மனிதத் தவறுகளால் ஏற்படும் விபத்துகள் தவிர்க்கப்பட்டிருக்கின்றன.

11,096 லெவல் கிராசிங்குகளில் இன்டர்லாக்கிங் வசதிகள் ஏற்படுத்தப்பட்டு பாதுகாப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டிருக்கின்றன.

30.06.2025 வரை 6,640 இரயில்வே நிலையங்களில் மின்சார சுற்றுகள் மூலம் தண்டவாள கண்காணிப்பு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. உச்சபட்ச பாதுகாப்பு தொழில்நுட்பமான “கவச்” அம்சம் 1548 கி.மீ. தொலைவிற்குஏற்படுத்தப்பட்டுள்ளது.

கட்டாய கண்காணிப்பு நடவடிக்கைகள், சிக்னல் மற்றும் தகவல் தொடர்பு அமைப்புகளை இயக்குவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை முறையாக மேற்கொள்ள வலியுறுத்தப்பட்டுளளது.

பனிமூட்டமான காலங்களில் பார்வை சிரமங்கள் ஏற்படும்போதும் எளிதில் புலப்படும் வகையில் 2 நிலைகளுக்கு முன்பு தொடங்கிய மேல்நிலை மின்சார கம்பங்களில் ஒளி பிரதிபலிப்பான்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தொலைவில் உள்ள சிக்னல் மற்றும் லெவல் கிராசிங்கு களை எளிதில் அடையாளம் காண உதவும் வகையில் இரயில் ஓட்டுனர்களுக்கு தடங்காட்டி (GPS) வசதியுடன் கூடிய பனிக்கால பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.அனைத்து ஆளில்லா லெவல் கிராசிங்குகளும் அகல இரயில் பாதைகளில் 2019ம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கு முன்பாக அகற்றப்பட்டுள்ளன.

இரயில் பெட்டிகள் மற்றும் தண்டவாளங்கள் இணைய வழியிலும் இரயில்வே ஊழியர்கள் மூலமாகவும் கண்காணிக்கப்பட்டு வெல்டிங் மற்றும் தண்டவாள குறைபாடுகள் முன்கூட்டியே கண்டறிய வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காவல்துறை மாநிலப் பட்டியலில் வருவதால் இரயில்வே காவல்துறையினருடன் ஒருங்கிணைந்து 2020 24 ஆண்டு வரையில் அடையாளம் தெரியாத பொருட்களை தண்டவாளத்தில் வைத்ததற்காக 277 வழக்குகள் பதியப்பட்டு 348 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரயில்வே பாதுகாப்பு கமிட்டி ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு இது போன்ற அடையாளம் தெரியாத பொருட்களை தண்ட வாளத்தில் வைக்கும் நிகழ்வுகளை தடுக்க மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆலோசிக்கப்பட்டுள்ளன.

ஒன்றிய மற்றும் மாநில புலனாய்வு அமைப்புகள் முடுக்கிவிடப்பட்டு காவல் துறையினருடன் ஒருங்கிணைந்து இர யில்வே தண்டவாளங்களை சேதப்படுத்திடும் முயற்சிகளை தடுத்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுளளது. விபத்து ஏற்படும் அபாயம் உள்ள பகுதிகளில் சிறப்பு குழுக்கள் நியமிக்க ப்பட்டுள்ளன.

இவ்வாறு ஒன்றிய இரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்கள் பதிலளித்துள்ளார்.

---




மக்கள் கோரிக்கைளுக்கு அரசு துறைகள் நேரடியாக தீர்வுகாணும் திராவிட மாடல் அரசின் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் சிறப்பு முகாம் திருத்துறைப்பூண்டி ஒன்றியம் நெடும்பலத்தில் நடைபெற்றது. அப்போது பல்வேறு துறைகளின் தீர்வுகாணப்பட்ட கோரிக்கைகளுக்கான பலனை பயனாளர்களுக்கு ஒன்றிய செயலாளர் பிரகாஷ் , நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ் க.மாரிமுத்து எம்.எல்.ஏ. மற்றும் அரசு அதிகாரிகள் முன்னிலையில் வழங்கினார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புதுப்பட்டி மிசா சொக்கலிங்கம்
### ஜூலை 28 (2007)



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரால் ஈர்க்கப்பட்டு, சிறுவயது முதலே திராவிட இயக்கத்தில் பற்றுடையவராகவும், கழகம் துவக்கப்பட்ட காலத்தில் கழகத்தின் வளர்ச்சிக்கும் பாடுபட்டவர்.

திருப்பத்தூர் ஒன்றியக் கழகச் செயலாளராக பலமுறை பொறுப்பு வகித்தவர்.

பழைய முகவை மாவட்ட கூட்டுறவு வங்கியின் இயக்குநராகவும், கழக ஆட்சிக்காலங்களில் பல்வேறு பொறுப்புகளையும் வகித்தவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக, மதுரை மத்திய சிறையில், மிசா கைதியாக ஓராண்டு காலம் சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**